சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு-௪௮

உ

திருச்சிற்றம்பலம்

---

# வடமொழிச்

# சுருதி சூக்தி மாலை

ஆசிரியர்

# அரதத்தாசாரியர்

திருநெல்வேலி
இந்துகலாசாலைத் தமிழாசிரியர்
**திரு. வி. சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள்**
எழுதியது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: & சென்னை
இரக்தாக்ஷி௵ பங்குனி௴

Published by

*The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,*

:: *Tinnevelly and Madras.* ::

*1925*

[*Copy-right*]

*Printed by C. Munisamy Mudaliar & Sons, Madras.*

உ

திருச்சிற்றம்பலம்

# அரதத்தாசாரியர் சரித்திரம்

பரவுபுகழ்ச் சோணாட்டிற் பலாசவனத் தமர்ந்துயிர்கட்
கிருளடருந் துயரொழிப்பா னெல்லையிலா தெழுந்தபெருங்
கருணைதிரு வடிவான கற்பகநா யகியொருபான்
மருவவள ரக்கினீச் சுரன்மலர்த்தா ளிணைபோற்றி

சோழநாட்டிலே காவேரியாற்றின் வடகரையிலேயுள்ள கஞ்சனூரிலே பிராமண குலத்திலே காசியப கோத்திரத்திலே சிருங்கிவாசுதேவ ரென்பவர் ஒருவர் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன் இருந்தனர். அவர் பாஞ்சராத்திரக் கொள்கைகளிலும் ஆசாரங்களிலும் மிகுந்த பற்றுடையவர். தமது நெற்றியில் வெள்ளைமண்ணும் மஞ்சட்பொடியுங்கொண்டு ஊர்த்துவ புண்டாரம் அணிபவர். அவர் தமக்கோராண்மகப்பேறு கிடைத்தல் வேண்டுமென விரும்பித் திருமாலை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். அவரது தவத்தின் பயனாக ஐந்துகோள்கள் தத்தம் வீடுகளிலே உச்சத்தை யடைந்த பொழுது ஒரு திருப்புதல்வர் பிறந்தருளினார். வாசுதேவர் அப்புதல்வருக்குச் செய்யவேண்டிய சாதகன்ம முதலிய சடங்குகளை உரிய காலங்களிலேசெய்து அவ்வருப்பெறற் குழந்தை

யாருக்குச் சுதரிசன ரெனப் பெயரிட்டனர். சுதரிசன ரும் தம்பெற்றோர் மனமகிழுமாறு பருவங்கடோறும் இளம்பருவ விளையாடல்களைச் செய்பவர் தாம் மண் விளையாட்டயர்கின்ற காலத்திலே சிவனடியார் திரு வடி பதிந்த இடத்திலுள்ள மண்கொண்டு விளையாடு வர். வாசுதேவர் இதனை அறிந்திலர். அவர் தம் புதல் வருக்கு நல்ல அணிகலங்கள் பூட்டியும் தூயமென் றுகில்கள் புனைந்தும் ஊர்த்துவ புண்டரம் அணிந்தும் பாராட்டி வளர்த்துவந்தார். சுதரிசனரும் மூவாண் டெய்தினர்.

அந்நாளிலே ஒரு நாள் அக்கஞ்சனூரில் வாழுஞ் சிவனடியாராகிய பசுபதியென்னும் அந்தணர் தெரு விற் செல்லச், சுதரிசனர் அவரை வணங்கித் தமக்குத் திருநீறும் உருத்திராக்கமுமாகிய சிவசின்னங்களைக் கொடுத்தருளுமாறு வேண்டினர். அவரும் சுதரிசன ரது பேரறிவிருந்தவாறு கண்டு மகிழ்ந்து அவருக் குத் திருநீறும் உருத்திராக்கமுங் கொடுத்தருளினர். சுதரிசனர் தமது நெற்றியி லணியப்பட்டிருந்த ஊர்த் துவ புண்டரத்தை யழித்துவிட்டுத் திருநீற்றை மெய்ம்முழுவதும் பூசி முக்குறியாகவும் அணிந்து உருத்திராக்கம் பூண்டு திருக்கோயில் சென்று அக் கினீசுவரப் பெருமானையும் கற்பகநாயகியாரையும் மெய்யன்புடன் வழிபட்டனர். இந்நிகழ்ச்சியறிந்த அந்நகர மாந்தர்கள் வியப்பெய்தினர்.

வாசுதேவர் தமது புதல்வருக்கு ஐந்தாவதாண்டு அணைந்த அளவிலே முந்நூல் அணிவித்தனர். அது

காறும் சுதரிசனர் செய்த செயல்களனைத்தும் இளம் பருவச் செயலெனக் கருதியிருந்த வாசுதேவர் ஒரு நாட் காலையில் அவரை யழைத்துக் 'குழந்தாய், நீ சிவாலயத்திற்குப் போகாதே: விபூதியணியாதே: உருத்திராக்கம் பூணாதே: சிவனடியாரோ டிணங்காதே: திருமாலின் திருவடித் தாமரைகளையே வழிபடு' என்று அறிவுறுத்தினர். சுதரிசனர் தம் பிதா கூறியதொன்றையுங் கேட்டிலர். அவர் வழக்கம்போலச் சிவசின்னந் தாங்கித் திருக்கோயில் சென்று அக்கினீசுவரப் பெருமானை வழிபட்டு வீட்டுக்கு வந்தனர். இதனை யறிந்த வாசுதேவர் சுதரிசனரைக் கயிற்றாற் கட்டி அடித்துத் தமது ஆசாரங்களை அறிவுறுத்தினர். சுதரிசனர் கட்டினின்று விடுபட்டதும் முன்போலச் சிவசின்னங்கள் தாங்கித் திருக்கோயில் சென்று அக்கினீசுவரப் பெருமானை நண்பகற் போதிலே வழிபடுவாராயினர். அதனையறிந்த தந்தையார் மிகவுஞ் சினங்கொண்டு தம்மனைவியாரை நோக்கி 'சுதரிசனன் என் சொற்படி நடக்கும்வரை நீ அவனுக்கு அன்னமிடாதே' என்று கூறிச் சென்றனர். சுதரிசனர் திருக்கோயிலினின்றும் வீட்டுக்குவந்து தமது தாயாரின் கைம்மலரைப்பற்றி, 'அம்மா! என்னைப் பசி மிகவும் வருத்துகின்றது; அன்னமிடுவாயாக' எனக்கூறி அழுதனர். அப்பொழுது தாயார் மனமிரங்கி 'அப்பா! உன் தந்தை நீ அவர் சொற்படி நடக்கும்வரை உனக்கு அன்னமிடல் கூடாதென்று கட்டளையிட்டிருக்கின்றனரே. நீயோ தந்தையின்

சொல்லைக் கேட்கின்றாயல்லையே. அவரே உனக்கும் எனக்கும் தெய்வம். நான் இப்பொழுது யாது செய்வது' என்று கூறிக் கண்ணீர் உகுத்தார். சுதரிசனர் மனம் பொறாது தம் வீட்டினீங்கித் திருக்கோயிலுக்குச் சென்றனர்.

சென்ற சுதரிசனர் அக்கினீசுவரப் பெருமானை மாலைப்பொழுதிலே வழிபட்டு 'என்னையுடையவரே, அடியேனுக்குத் தேவரீரே தந்தையார். உமையம்மையாரே தாயார். விநாயகக்கடவுளும் முருகப்பெருமானுமே உடன்பிறந்தோர்கள். உமது அடியார்களே எனது நண்பர்கள். அடியேன் உம்மை நினையாதிருப்பினும் தேவரீர் என்னைக் காத்துவருகின்றீர். தேவரிற் சிறந்த திருமாலும் நான்முகனும் உமது திருவடியையும் திருமுடியையும் அறிய முடியாது எய்த்தார்களென்றால் யானோ உம்மை வழிபாடு செய்தற்குத் தகுதியுடையேன். எனக்கு உம்முடைய திருவடிகளே புகலிடம். தேவரீர் என்முன் எழுந்தருளல் வேண்டும். எனக்கு உம்மையன்றி வாழ்வில்லை. உம்மைக் காண்பதற்கே நான் ஆசைப்பட்டேன்' என்று கூறி இரந்தனர். பின்பு சுதரிசனர் தனியிடஞ் சார்ந்து தியான சமாதியிலிருப்ப, அன்றிரவிலே அடியார்க்கெளிவருங் கருணைவள்ளலாகிய சிவபெருமான் உபவீதம்போலத் தரித்தருளிய தூய ஆடையினையுந் திரிபுண்டரத்தினையுமுடையராய் வெளிநின்றருளிக் 'குழந்தாய்! நீ எதற்காக வருந்துகின்றாய். நிகழ்ந்தவற்றைக் கூறுக' என வினவியருளினர். சுதரி

சனர் பணிந்துநின்று 'எம்பெருமானே! தேவரீர் தாம் அனைத்தும் அறிவீரே' என்று தொடங்கித் தம்மீது தமது தந்தையாருக்கு உண்டாகிய சினத்தையும் அதன் காரணத்தையும் பணிந்து கூறினர். அதனைத் திருச்செவி சாத்திய பெருமான் சுதரிசனரது அன்பிருந்தவாறு கண்டு மனமகிழ்ந்து 'குழந்தாய்! உனக்கு வேண்டற்பாலது யாது? அதனைத் தருகின்றோம்' என்றருள் செய்தனர். சுதரிசனர் 'எம்பெருமானே! தேவரீர் காட்சியருளியபின் எனக்கு வேண்டத்தக்கது யாது? உம்முடைய திருவடியில் எனக்கு என்றும் மெய்யன்பு உண்டாவதொன்றே அடியேன் வேண்டுவது' என்று தெரிவித்தனர். சிவபெருமான் சுதரிசனரது வேண்டுகோளின் வண்ணம் 'நீ வேண்டியவற்றைக் கொடுத்தோம்' என்று திருவாய் மலர்ந்தருளி *அவருக்குப் படிகலிங்கமொன்று உதவி வேத சிவாகமங்களின்படி வழிபாட்டு முறையையும் உரைத்தருளி 'இனிமேல் உனதுபெயர் அரதத்த னென்று வழங்குவதாக' எனக்கூறிக், 'குழந்தாய்! நீ பசியால் மிகவும் களைப்புற்றிருக்கிறாய்: நமது அநுசரர் வாயிலாக உனக்குப் பாயசான்னந் தருகின்றோம். நீ அதனைப் பெற்று உண்டு உன் வீட்டுக்குச் செல்க' என்றருளிச் செய்து திருவுருக்கரந்தனர். அரதத்தர் சிவபெருமான் தமது அநுசரரால் கொடுத்தருளிய பாயசான்னத்தைப் பெற்று உண்டு சொப்பன சமர்

* அரதத்தாசாரியர் பூசித்த சிவலிங்கம் தனியாகக் கஞ்சனூரிலே பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது.

தியோ யெனக்கருதி யோகிகளைப்போல உண்மை ஞானந் தெளிந்து மெய்யுணர்வுப் பிழம்பாய் விளங்கினர். அவ்வாறு விளங்கிய அரதத்தர் தமக்கு எளிவந்து காட்சி கொடுத்தருளிய சிவபெருமானை மறவாத சிந்தையோடு வீட்டுக்குச் சென்றனர்.

அரதத்தர் வீட்டிற்சென்று தமது தாயாரை அழைத்துக் கதவுதிறக்குமாறு வேண்டினர். அதனைக் கேட்ட வாசுதேவர் தமது புதல்வரியல்பினை யறியாதவராய் மிகவும் சினந்து 'நான் சொல்லியபடி நீ நடப்பதானல் உனக்கு உணவுகொடுப்பேன்: நீ வெள்ளேறு ஏறுவான் கோயிலுக்குப்போனல் உன் கால்களை வெட்டுவேன்: சிவனுக்குத் தொண்டு செய்யாதே' என்றிவ்வாறு பல பல கூறினர். அரதத்தர் தம் தந்தை கூறிய சிவநிந்தைகளைக் கேட்கப் பொருதவராகிக் 'கௌதமர் ததீசி கண்ணுவர் உபமன்னியு திருநந்திதேவர் என்பவர்களாற் சபிக்கப்பட்ட கூட்டத்தினருள் நீவிருஞ் சேர்ந்திருக்கின்றீராதலின், சிவபெருமானது பெருமையை அறியாது பல பல கூறுகின்றீர்: எம்பெருமானுடைய திருவருட்செயல்கள் பலவற்றையும் எடுத்துச் சொல்வதைவிட ஒரு காரண மட்டும் சொல்லி அப்பெருமானுடைய மேம்பாட்டினை நிலை நிறுத்துகின்றேன்' என்று கூறித் தந்தையாரை நோக்கித் 'திருமால் சிவபெருமானைத் தமது விழித் தாமரையால் வழிபட்டனரோ அன்ரோ? என வினவினர். இவ்வாறு வினவவும் வாசுதேவர், தாம் பரமப் பிரமாணமெனக்கொண்ட திருவாய் மொழியி

னும்* இச்செய்தி கூறப்பட்டிருப்பதால் யாதும் விடை கூற இயலாது சிறிதுநேரந் திகைத்துப் பின்னர் அவ்வாறு திருமால் வழிபட்டது உலகினை வஞ்சித்தற் பொருட்டன்றி உண்மைபற்றி யன்றென விடை பகர்ந்தனர். அரதத்தர் வாசுதேவரை நோக்கித் 'திருமாலின் முழுமுதற் றன்மையை வேதாகம முறைப்படி பேசுக' எனச் சொல்லத் தந்தையாரும் தாம் அறிந்த முறையிற் பேசினர். அரதத்தர் தந்தை கூறியவை அனைத்தையும் வேத முதலிய பிரபல பிரமாணங்களால் மறுத்தனர். வாசுதேவருக்கு இச்சமயத்தில் தாம் முன்பு உண்மையெனக் கொண்டிருந்த பாஞ்சராத்திரக் கோட்பாடுகளில் ஐயுறவு தோன்றியது.

இவ்வளவில் வாசுதேவரது அகவிருளும் புறவிருளும் நீங்கும் வைகறைப் பொழுதாயிற்று. தந்தையார்க்கும் மைந்தர்க்கும் நிகழும் விவாதம் அறிந்த பலரும் ஒருங்கு திரண்டார்கள். செங்கதிர்க் கடவுளும் இவ்வரிய வாத நிகழ்ச்சியைக் காணவிரும்பி ஏழ் பரி பூட்டிய தனது ஒற்றையாழித் தேரிலேறி விரைய வந்தான். பெருந்திரளான சிவனடியார்களும் வைணவர்களும் அங்கே கூடினார்கள். அப்பொழுது அக்கூட்டத்திலே யிருந்த அறிவான் முதிர்ந்தோரிலொருவர் ஏனை அனைவரையும் கையமைத்துச் 'சாத்

* 'செக்கர்வா னச்சடையோன் சேவடிக்கீ ழந்நாளின்,
மெய்க்கணிட்டுச் சக்கரமீ பெற்றவிளை யாட்டேபோல்'
என்பது திருவாய்மொழி. இச்செய்யுட்பகுதி அச்சிட்ட பிரதிகளிற் காணப்பட்டிலது.

திர முறையாய்ச் செய்யும் வாதத்தின் வெற்றி தோல்விகளை அறிஞர்களே யறிவர்: ஆதலின் அறிவிற் குறைந்தாருட்பட அனைவரும் உண்மை தேறும் பொருட்டு ஏதேனும் அற்புதமொன்றாற் சிவபெருமானது மேன்மை விளக்கிக் காட்டப்படல் வேண்டு' மென்று கூறினர். அரதத்தரும் அவ்வாறு செய்தற்குத் திருவருளிருந்தபடியை உணர்ந்து 'ஓம்' என்று கூறி உடம்பட்டனர். உடனே வைணவர்கள் அரதத்தரை நோக்கி 'நீவிர் பழுக்கக் காய்ச்சிய இருப்பு முக்காலியிலிருந்து உமது சிவபெருமானுடைய மேன்மையை வேதப்பிரமாணங்களுடன் கூறுக' என்றனர். அரதத்தரும் அதற்கிணங்கினர். அப்பொழுது சிவனடியார்கள் 'நமது அக்கினீசுவரப் பெருமானுடைய திருக்கோயிலிலே அக்கினீசுவரப் பெருமானுக்கும் நந்திபிரானுக்கும் நடுவே இதற்கு வேண்டுவன அமைப்போம்' என்றனர். வைணவர்கள் 'நாங்கள் எக்காரணத்தாலும் சிவன் கோயிலுள் நுழையோம். எங்கள் வரதராஜ சுவாமி ஆலயத்தில் வரதராஜப் பெருமானுக்கும் கருடனுக்கும் நடுவே பழுக்கக் காய்ச்சிய இருப்பு முக்காலியிலிருந்து இச்சிறுவன் சிவனுடைய முழுமுதற் றன்மையை நிலை நிறுத்துவானாக' என்றனர். அரதத்தர் அதற்கும் இசைந்தார்.

வைணவர்கள் தாம் முற்கூறியபடி வரதராஜப் பெருமானுக்கும் கருடனுக்கும் நடுவே இருப்பு முக்காலியை இட்டனர். அரதத்தர் சிறிதுங் காலந்தாழ்க்காது வரதராஜப் பெருமானை வணங்கித் 'தேவ

தேவரே, உலகத்தைக் காப்பவரே, சிவபெருமானது திருவடித் தாமரைகள் மலரும் உள்ளப் பொய்கையுடையவரே, சிவவழிபாட்டி னீங்காதவரே, சிவனடியாருட் சிறந்தவரே, திருமாலே, சிறியேன் உமது அடைக்கலம். யான் உபநிடதங்களின் மெய்ப் பொருளை நிலைநிறுத்தப் போகின்றேன். உமது திருமுன்பு இடப்பட்ட இவ்விருப்பு முக்காலி தண்ணீர் போற் குளிர்ச்சி யடைவதாக' என வேண்டிக்கொண்டு வெளிப்போந்து, உமையமர்ந்து விளங்கும் இடப் பாகத்தையுடைய சிவபெருமானை மனத்தில் நினைத்துப் பழுக்கக் காய்ச்சிய இருப்பு முக்காலியை வலம் வந்து அதன் மீதேறி யிருந்தனர். அவ்விருப்பு முக்காலி சமணரிட்ட நீற்றறை திருநாவுக்கரசு நாயனுருக்கு ஆயினவாறு போல மூசுவண்டறை பொய்கை போன்று குளிர்ந்தது. ஞானபானுவாகிய அரதத்தாசாரியர் அம்முக்காலியி லிருந்தவாறே வைணவர்கள் உள்ளத்தைப் பொதிந்திருந்த அறியாமையிருள் நீங்கவும் சிவனடியார்கள் உள்ளத்தில் மெய்யன்புத் தாமரை மலரவும் சுருதி சூக்தி மாலை யென்னும் அரிய நூலை அருளிச் செய்தனர். அன்றியும் சிவபெருமானது முதன்மையை யாவரும் எளிதின் உணர்ந்து கொள்ளும் பொருட்டுக் 'காயத்ரி வல்லபத்வாத்' என்று தொடங்கும் *பஞ்சரத்தின மாலிகையையும்,

* இப்பஞ்சரத்தின மாலிகையினை ஸ்ரீமாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞானபாடியத்தில் முதற் சூத்திரத்து இரண்டாவது அதிகரணவுரையில் மொழிபெயர்த்தருளினார்கள்.

'விஷ்ண வாத்யாச்ச' என்று தொடங்கும் தசசுலோகீயினையும் அரதத்தாசாரியர் அருளிச் செய்தனர். மேலும் சிவபெருமான் திருமாலென்னு மிருவரையுங் குறித்துப் பெரும்பான்மை புராணங்களிலும் இதிகாசங்களிலுங் கூறப்பட்ட வரலாறுகளையும் சிறுபான்மை வேதத்திற் கூறப்பட்ட பெருமையையும் ஒப்புநோக்கி அரிகரதார தம்மியம் என்னும் நூலையும் அருளிச் செய்தனர். அவ்வளவிலே இருப்பு முக்காலி முத்துச் சிவிகையாக வைணவ சமயத்தை நிராகரித்தற்கு அதிலெழுந்தருளியிருந்த அரதத்தாசாரியர் சமணசமயத்தை நிராகரித்தற்கு முத்துச் சிவிகையிலெழுந்தருளியிருந்த திருஞானசம்பந்த சுவாமிகள் போன்று விளங்கினர். இவ்வற்புதத்தைக் கண்ட அனைவரும் அரதத்தாசாரியர் சிவபெருமானே யெனக் கொண்டு அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினர். அப்பொழுது தந்தையாராகிய வாசுதேவர் தமது புதல்வர் சிவபெருமானருளாற் செய்த அற்புதத்தையும் அவரது அருண்மொழியின் வன்மையையும் உணர்ந்து புதல்வரை வணங்கித் தாம் அறியாமையாற் செய்த குற்றங்க ளனைத்தையும் பொறுத்துத் தமக்குத் திருநீறு அருளி ஐந்தெழுத்துண்மை அறிவித்துச் சிவபெருமான் திருவருட்பேறு கிடைத்தற்கு அருள் செய்ய வேண்டுமென்று குறையிரந்தனர். ஏனைய வைணவர்களும் அவ்வாறு வணங்கி வேண்டினர். அரதத்தாசாரியர் 'உடம்பிலே தப்த முத்திரைகளாகிய சங்கு சக்கரங்களை

யணிந்த உங்கட்கு வேதத்திலே கூறப்பட்ட திருநீ றணிதலே கழுவாயாகும்' என்று சொல்லித் தந்தையா ருள்ளிட்ட அனைவருக்கும் திருநீறருளித் திருவுருத் திராக்கம் அணிவித்து ஐந்தெழுத் தறிவித்துச் சிவ பூசை யெழுந்தருளிக் கொடுத்துப் பூசாவிதியும் அருளினர். ஆசாரிய சுவாமிகளது தாயார் இச் செய்திகளைக் கேட்டு அவர்பா லணைந்து அவரைத் தழுவி உச்சிமோந்து துன்பமொருபாலும் பெரு மகிழ்ச்சி யொருபாலும் அலைப்பக் கண்ணீர் வார்ந்து, 'என் ஐயனே! நீ பசியால் வருந்தினாய். அமுதருந்து மாறு வீட்டுக்கு வருக' என்று அழைத்தனர். ஆசா ரியர் அதற்கிணங்கி வீடு சென்று சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டிருந்து சிவநிவேதனத்தை அருந் தினர். அன்று முதலாகக் கஞ்சனூரிலும் அதனை யடுத்த பலவூர்களிலு முள்ள வைணவர்கள் அனைவரும் சைவர்களாகிச் சிவபூசா துரந்தரர்களாய் விளங்கினார் கள். அவ்வூர்களும் பூலோக சிவலோகமெனப் பொலிந்தன.

இங்ஙனம் அரதத்தாசாரியர் குழந்தைப் பருவத் திற்றானே சிவபெருமானாற் பாயசான்னம் அருளப் பெற்றமையும் சைவசித்தாந்த ஆசாரியராய் விளங்கி வைணவர்களால் இடப்பட்டதும் பழுக்கக் காய்ந்தது மாகிய இருப்பு முக்காலியிலிருந்து சைவத்தை நிலை நிறுத்தியதும் அந்நாட்டு அரசராகிய சிவலிங்கபூபதி யென்னும் வேந்தர் கேள்வியுற்று, மந்திரி முதலா யினோர் புடைசூழ நாற்படையுடன் கஞ்சனூரடைந்து

ஆசாரியருடைய திருவடிகளில் விழுந்து வணங்கிப் 'பாண்டிமன்னனாகிய என்னைக் காத்தற் பொருட்டு என் குலதெய்வமாகிய சோமசுந்தரப் பெருமானே இம்மூர்த்தியாய் இங்கெழுந்தருளினார்' என்று பரவினார். அச்சமயத்தில் அரசர் முதலியோர் கேட்குமாறு சிவபெருமானது திருவருளினாலே அசரீரிவாக்குத் 'தனது தாமரைக் கண்ணினாலே நம்மை வழிப்பட்ட திருமாலே இப்பொழுது நமது திருவடிப் பத்தியை விளைவித்துச் சிவநெறியைத் தழைப்பித்து உலகத்தை வாழ்விக்கப் பிறந்திருக்கின்றான்' என ஆகாயத்தில் எழுந்தது. அரசர் மிகவும் விம்மிதராகி ஆசாரியர் திருவடிகளில் விழுந்து வணங்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினர். ஆசாரியரும் அரசரது பக்குவத்தையறிந்து அவருக்கு ஐந்தெழுத்துபதேசம் புரிந்து சிவபூசை யெழப்பண்ணிக் கொடுத்தனர். அரசர் ஆசாரியருக்குக் கையுறையாக அளவிறந்த பொன்னும் மணியுஞ் செலுத்தி விடைபெற்றுச் சென்றனர். ஆசாரியரும் பிரமசரிய நிலையை வழுவாது நடத்திச் சிவபூசை சிவத்தியான முதலியன செய்து வருவாராயினர்.

இவ்வாறு பல ஆண்டுகள் கழிய, ஆசாரிய சுவாமிகளுக்கு மணமுடிக்கும் பருவம் எய்தியது. அஃதறிந்த சிவலிங்கபூபால சோழர் கஞ்சனூர் சென்று ஆசாரியரை வணங்கி அவரது தந்தையாரிடம் திருமணமுடிக்குஞ் செய்தியைக் குறித்துப் பேசிய காலத்திலே, சிவபக்தி அடியார் பத்திகளிற் சிறந்தவரும்

சிவபெருமானை மறவாத சிந்தை யுடையவருமாகிய சுப்பிரதீகர் தமது அரும் பெறற் புதல்வியாராகிய கமலவல்லியாரை ஆசாரியருக்கு மணமுடித்துக் கொடுப்பதாகக் கூறினர். அனைவரும் அதற்கிசைந்த பின், அரசருடைய கட்டளையால் நகர முழுவதும் கமுகு வாழை முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டது. கஞ்சனூரிலே யுள்ளோ ரனைவரும் தத்தம் வீடுகளைக் கோலங்களாலும் தோரணம் கொடி முதலியவைகளா லும் அழகு செய்தார்கள். திருமணத்திற்கு வேண்டும் பொருள்கள் யாவும் சிவலிங்க பூபாலர் சேகரித்து அமைத்தனர். சோதிடர்கள் குறிப்பிட்ட நற்பொழு திலே அரதத்தாசாரியருக்கும் கமலவல்லியம்மை யாருக்கும் திருமணம் நடைபெற்றது. அது முதல் ஆசாரியர் தமது வாழ்க்கைத் துணையாராகிய கமலவல் லியாரோடு சிவாராதனை முதலியன சிறப்புறச் செய்து வந்தனர்.

ஒரு முழுமதி நாளிலே ஆசாரியர் காவேரியிலே நீராடி வந்து மாத்தியான்னிகஞ் செய்து சிவபூசை செய்யத் தொடங்கிச் சிவபெருமானுக்கு நீராட்டும் பொழுது ஒருநாய் பூசா மண்டபத்துட் புகுந்து நீர் வேட்கை மிகுதியால் அபிடேக நீரைக் குடிக்க விரும் பித் தன் நாவை நீட்டியது. உடனே ஆசாரியர் சங்கா பிடேக நீரை அந்த நாயின் நாவிலே வார்த்து எஞ்சிய நீரால் சிவபெருமானை அபிடேகித்தனர். அச்சமயம் அவ்விடத்திருந்தோர் சிலர் ஆசாரியரை நோக்கிச் 'சுவாமி, இவ்வாறு செய்தல் பொருந்துமா? அடியேங்

களுக்கு உண்மை யறிவித்தல் வேண்டும்' எனக் கேட்டனர். அப்பொழுது ஆசாரியர் 'சிவபெருமானே இவ்வடிவில் எழுந்தருளி வந்து கேட்கும் பொழுது யான் யாது செய்வேன்' என்று கூறியருளினர். அது கேட்ட அனைவரும் ஆசாரியர் சிவபெருமானிடம் வைத்த அயராவன்பின் திறத்தை யுன்னி மெய்ம் மயிர் சிலிர்த்து மகிழ்ந்தனர்.

ஆசாரியர் அங்ஙனம் சிவபூசை முடித்ததும் அக்கினீசுவரப் பெருமானை வழிபடும் பொருட்டுத் திருக்கோயிலுக்குச் சென்றனர். அங்கே கோயிலதிகாரிகள் கோயிற் பணிவிடை செய்யும் உருத்திர கணிகையரை முன்னைய இரவிலே பணிவிடை செய்ய வாராத குற்றத்திற்காக வெயிலிலே நிறுத்தி வருத்தினார்கள். இதனைத் தெரிந்த ஆசாரியர் தமது தலையிலும் வயிற்றிலும் பலமுறை புடைத்துக் கீழே விழுந்து மூர்ச்சித்தார். இதன் உண்மையை அறியாத சிலர் ஆசாரியரை நகைத்தனர். கோவிலதிகாரிகள் ஆசாரியரை யடைந்து 'சுவாமி, தேவரீர் எதற்காக இவ்வாறு வருந்துகின்றீர்கள்' என்று கேட்க, ஆசாரியர் 'திருக்கோயிலுக்கு வந்து சேவிக்குமாறு ஒறுக்கப்பட்ட இக்கணிகையர் செய்த தவமே தவம். இஃது அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய அற்புதமாயிருக்கின்றதே. யான் இன்று பொழுது கழித்துச் சேவை செய்யவந்தேன். என்னை இவ்வாறு ஒறுக்க யாருமில்லையே யென்று வருந்துகின்றேன்' என்றனர். உடனே கோயிலதிகாரிகள் உருத்

திரகணிகையரை விடுவித்து ஆசாரியருடைய சிவபத்தியை வியந்து புகழ்ந்தனர். ஆசாரியர் முன்போல நியமமாகச் சிவாராதனஞ் செய்து வந்தனர்.

இங்ஙனம் நிகழும் நாளிலே கமல வல்லியம்மையார் திருவயிறு வாய்த்து ஓர் புதல்வரைப் பெற்றார். ஆசாரியர் அப்புதல்வருக்கு அக்கினீசுவரனென்று பெயரிட்டனர். அப்புதல்வருக்குப் பின்னர் மகாதேவர், நீலகண்டர், சங்கரர், சந்திரசேகரர், சம்பு, மத்தியார்ச்சுனேசுவரர், கோவடுநாயகரென்னும் ஏழு புதல்வர்களும் கற்பகை மீனாக்ஷி யென்னுமிரண்டு புதல்விகளும் பிறந்தார்கள். அக்குழந்தைகள் அனைவரும் திருநீறுங் கண்மணியுமாகிய சிவசின்னங்கள் அணிந்து ஐந்தெழுத்துருச் செய்பவர்களாய்ச் சிவபூசை புரிபவர்களாய்த் தந்தையாராணைவழி நிற்பவர்களாய் விளங்கினார்கள்.

ஒரு கால் சிவலிங்கபூபதி அக்கினீசுவரப் பெருமானுக்குச் சாத்தும் பொருட்டு விலையுயர்ந்த பட்டாடை யொன்றனை ஓரந்தணர் வாயிலாக ஆசாரியரிடம் விடுத்தனர். அவ்வந்தணர் பட்டாடையைக் கொண்டுவந்து ஆசாரியரிடம் சேர்க்குங் காலம் ஆசாரியர் சிவாக்கினியில் ஓமஞ் செய்யுஞ் சமயமாயிருந்தது. அந்தணர் ஆசாரியரை வணங்கி 'அரசர் இதனை அக்கினீசுவரப் பெருமானுக்குச் சாத்தும்பொருட்டு விடுத்தனர்' என்று விண்ணப்பித்துப் பட்டாடையைக் கொடுத்தனர். ஆசாரியர் அதனை வாங்கி அக்கினீசுவரப் பெருமானைச் சிந்

தித்து அவ்வக்கினியில் ஆகுதி செய்தனர். அவ்வாடை நொடிப் பொழுதில் சாம்பராயிற்று. அது கண்ட அந்தணர் வியப்புற்றாராயினும் ஆசாரியர்பால் வினவுதற்கு அஞ்சினவராய் விடைபெற்றுப் போய் அரசரையடைந்து நிகழ்ந்த செய்தியைக் கூறினர். அரசர் 'நம் ஆசாரியர் அவ்வாறு செய்தற்குக் காரணமென்னோ? இதனுண்மையை அறியவேண்டும்' என்று கருதி, ஆசாரியரை யடைந்து வணங்கிச் 'சுவாமீ, அடியேன் விடுத்த பட்டாடை அக்கினீசுவரப் பெருமானுக்குச் சாத்தியாயிற்றோ?' என, ஆசாரியர் 'ஆம்' என்றுகூறி, அரசனைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று அப்பட்டாடை சாத்தியிருப்பதைக் காட்டினர். அரசர் ஆசாரியரது பெருமையைத் தெளிந்து, தாம் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். ஆசாரியர் அரசருக்குச் சிவபெருமான் றிருவடிப்பத்தி நிலைநிற்குமா றருள்புரிந்தனர். அரசர் விடைபெற்று மீண்டனர்.

பின்பு ஒருநாள் கஞ்சனூரிலே அந்தண னொருவன் வைக்கோற்கட்டினைத் தொழுவத்தின் உட்புறம் இடும்பொழுது உட்புறம் அவனுக்குப் புலப்படாமையால் அவ்வைக்கோற் கட்டு அங்குக் கட்டப்பட்டிருந்த இளங்கன்றின்மீதுபட அஃதிறந்தது. அதனையறிந்த அவ்வூரந்தணர்கள் அவனைப் பசுக்கொலை புரிந்தானென் றிகழ்ந்து ஊரினின்றகலுமாறு வற்புறுத்தினர். அவ்வந்தணன் 'அறியாமையான் இக்கொலை நிகழ்ந்ததே. யான் யாது கழுவாய் செய்வேன். ஊரார்

இவ்வாறு இகழுகின்றனரே' என்று மிகமனம்வருந்தி அறிவழிந்து பேய்க்கோட்பட்டவன்போ லாயினன். அவனுக்குத் திருவருள் வலத்தால் அக்கினீசுவரப் பெருமானது திருக்கோயிலை வலம்வரும்பேறுகிடைத் தது. அதனால் அவன் மனஞ் சிறிது தெளி வடைந்து 'நான் அரதத்தாசாரியரை அடைந்தால் அவர் இதற்குத்தீர்வு அருளிச்செய்வர்' என்றெண்ணி அங்கே சென்றான். அவன் ஆசாரியர் வீட்டினுட் புகும்பொழுது தலைவாயில் தன் தலையி லிடித்தலின் அவன் 'சிவ சிவ' என்று சொல்லிக் கீழே யிருந்தான். சிவ நாமங் கேட்ட ஆசாரியர் 'யாவரோ சிவனடி யார் வாயிலில் வந்தனர்' என்று தெரிந்து ஓடி வந்து முகமன் கூறி அவனை யழைத்துச் சென்றனர். அப் பொழுது அவ்வந்தணன் 'சுவாமீ. அடியேன் அறி யாமையால் பசுக் கொலை புரிந்துவிட்டேன். என் னைக் கடைக்கணித் தருளல்வேண்டும்' என்று தெரி வித்து வணங்கினன். ஆசாரியர் அவனை நோக்கி 'நீர் செய்த பசுக்கொலைக்குத் தீர்வு முன்னமேயாயிற்று. உமக்கு வீடும் கிடைத்து விட்டது' என்றனர். அந்தணன் அது கேட்டு வியப்புற்றுநின்றான். ஆசா ரியர் *நீர் முதலிற்கூறிய சிவச் சொல்லால் நீர் செய்த பாவம் நீங்கிற்று. இரண்டாவது கூறிய சிவச்சொல் லால் முத்தி கிடைத்து' என்று கூறியருள, அந் தணன் பேரானந்த முற்றனன். இவ்வினைத்தையுங்

* 'விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ, லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாற், பண்ணிய வுலகினிற்

கண்டு நின்ற ஒருவன் ஆசாரியர் கூறியவற்றை நம் பாது வீண் வழக்குச் செய்ய ஆசாரியர் 'சிவநாமத்தின் பெருமையறியாத வுன்னைப் பார்த்தலும் பெருங் குற்றம்' என்று சொல்லி விடுத்து, அவ்வந்தணனை நோக்கி 'நீர் சிவபெருமான்றிருப்பெயர்களை உரக்கச் சொல்லிக் கொண்டிரும்' என்றருளிச்செய்து விடுத்தனர். அவனும் அவ்வாறே ஆனந்தமேலீட்டால் 'என்பாவம் ஒழிந்தது ஆசாரியர் திருவருளால் என் பாவம் ஒழிந்தது' என்று பலமுறை சொல்லிக்கொண்டு போம்பொழுது சிலர் அவனை நோக்கி ' நீ கூறியதை யாங்கள் உண்மை யெனக் கொள்ளோம்; அக்கினீசுவரப் பெருமான் றிருக்கோயிலிலுள்ள விடைத்தேவர் நீ கொடுக்கும் புல்லை யுண்பாராயின், யாங்

பயின்ற பாவத்தை, நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே'
திருநாவுக்கரசு. நமச்சிவாயப்பதிகம். பண் காந்தாரம் ௩.

'அபிவாயச்சண்டாலச் சிவ இதிவர்சம் வதேத் தேநஸஹஸம்வதேத் தேநஸஹஸம்வதேத் தேநஸஹபுஞ்ஜீத' என்பது மூண்டகோபநிடதம்.

'சிவனெனுமொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடினவனொடு முறைக
வவனொடு கலந்து பேசுகவவனோ
டருகிருந் துண்ணுகவென்னு
முவமையில் சுருதிப்பொருடனை நம்பா
வூமரோடுடன்பயில் கொடியோ
னிவனெனக் கழித்தாலையனே கதிவே
றெனக்கிலை கலைசையாண்டகையே'

என்பது சிவஞான சுவாமிகள் திருவாக்கு.

கள் அதனை மெய்யெனக் கொள்வோம்' என்றனர். அந்தணன் ஆசாரியர்பாற் சென்று அதனைத் தெரிவித்து ஆசாரியர் அருளியவாறு அறுகம்புல்லைப் பறித்து விடைத்தேவர்பாற் சென்று 'சுவாமீ, என் பாவமனைத்தும் சிவநாமத்தால் நீங்கியது உண்மையாயின் இதனை ஏற்று உண்க' என்று வேண்ட, விடைத்தேவர் தமது நாவினை நீட்டி வலப்பக்கமாக வளைத்து அதனை வாங்கியுண்டனர். இந்நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் சிவநாமத்தின் சிறப்பும் ஆசாரியரது பெருமையும் அறிந்து மகிழ்ந்தனர்.

கஞ்சனூரிலே சதாசிவரென்னும் அந்தணரொருவர் மிகவும் வறியவராயிருந்தார். அவர் தமது வறுமை நீங்குவதற்கு உபாயம் யாதென்று நூல்களில் வல்ல பெரியோர்களிடம் கேட்ப அவர்கள் 'நூல்கள் விதித்த சிறந்த தானங்களைச் சற்பாத்திரர்களாகிய அந்தணர்களுக்கு இயன்ற அளவு கொடுப்பின் வறுமை நீங்கும்' என்றனர். சதாசிவர் அரதத்தாசாரியரினுஞ் சிறந்த சற்பாத்திரர் யாருமிலரென்று துணிந்து அவரையடுத்துத் தமது வீட்டுக்குத் திருவமுதுகொள்ள எழுந்தருளவேண்டுமென்று குறையிரந்தனர்: ஆசாரியரும் உடம்பட்டுச் சதாசிவர் வீட்டுக்குச் செல்லச் சதாசிவர் உபசாரஞ் செய்து ஆசாரியருக்கு நல்ல விருந்தளித்தனர். விருந்து முடிந்ததும் சதாசிவர் ஆசாரியரை நோக்கிச் 'சுவாமீ, நான் வறுமையால் மிகவும் துன்புறுகின்றேன். எனக்கு அருள்புரியவேண்டும்' என்ன,

ஆசாரியர் அவர்க்கு ஆசி கூறித் திருநீற்றுக்காப்பு அளித்தருளித் தமதில்லஞ் சென்றனர். சென்ற அப்பொழுதே அரசர்பிரான் சதாசிவரை அழைத்து வருமாறு ஏவலாளை விடுப்பச் சதாசிவர் 'அரசர்க்கு யான் தீங்கு யாதுஞ் செய்திலேனே! எனக்கு யாது தண்டம் வருமோ!' என்ற அச்சங் கொண்டவராய் அரசர் திருமுன்பு சென்றார். அரசர் அவரை அருச்சித்து வணங்கிப் பட்டாடை பொன் பசு விளைநில முதலியன கொடுத்து விடுத்தனர். சதாசிவர் ஆசாரியரது பெருமையும் சற்பாத்திர தானத்தால் வரும் பயனும் அறிந்து மகிழ்சிறந்து வாழ்ந்தனர்.

ஒரு சமயம் ஆசாரியருடைய தாயார் சிவநிவேதனத்தின் பொருட்டுப் பசுபதியென்னும் அந்தணரிடம் பதக்கு நெல்லைப் பெற்றுக் காயவைத்திருந்தார். தெருவிலே சென்றுகொண்டிருந்த ஓர் எருது அதனை உண்ணத் தொடங்கியது. அருகிலிருந்த ஆசாரியர் அவ்வெருத்தின் பக்கம் சென்று நெல்லைக் கூட்டிக் குவித்து அதனை உண்பித்துக்கொண் டிருந்தனர். அது கண்ட தாயார் சினங்கொண்டு அவ்வெருத்தைக் கோலினால் புடைத்து ஓட்டினார். ஆசாரியர் இந் நிகழ்ச்சிக்கு மனம்வருந்தியிருக்குமளவிலே சிவலிங்க பூபதியால் விடுக்கப்பட்ட தூதர்கள் வந்து ஆசாரியரை வணங்கிச் 'சுவாமீ, அரசர் தங்கட்கு நானூறு அரிசிப் பொதிகள் விடுத்தனர். அவற்றுள் இருநூறு பொதிகளை ஆற்றுவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. மிகுதி இருநூறு பொதிகளும்

இங்கே வந்திருக்கின்றன. அவற்றை ஏற்று அருளல் வேண்டும்' என்று விண்ணப்பித்தனர். ஆசாரியர் அதனைக் கேட்டுத் தமது தாயாரை அழைத்து 'அம்மே, நீ எருத்தை நெல் உண்ணுது அடித்து ஒட்டிய தீச் செயலின் பயனை அறிந்தனையா' என்றனர். உண்மை யுணர்ந்த தாயார் மிகவும் மனம் வருந்தினர்.

ஆசாரியருடைய மனைவியார் ஒரு நாள் திருவமுது அமைத்தற் பொருட்டு அரிசி களையும் பொழுது அடுப்பில் நெருப்பு அவிய அதனைப் பெருக்கச் சென்றனர். அவ்வளவில் ஒரு நாய் வீட்டினுள் நுழைந்து அவ்வரிசியைத் தின்றது. மனைவியார் அது கண்டு அடுக்களையி லிருந்தவாறே அரிவாளை யெடுத்து அதன்மீது வீசி யெறிந்தனர். அது நாயின்மேற் பட்டுக் கழுத்தை வெட்டிவிட நாய் மூர்ச்சித்து விழுந்தது. மனைவியார் 'அறியாமையால் இப்பாவம் விளைந்ததே' யென்று புலம்பி வருந்தி, அதற்குக் கழுவாயாக ஐந்தெழுத் தோதிக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஆசாரியர் வந்து நாய் மூர்ச்சித்துக் கிடப்பது கண்டு, நிகழ்ந்தவற்றைத் தெரிந்து மனைவியாரை நோக்கி 'நீ வாயிற் கதவைத் தாழிட்டு வையாத குற்றத்தாலே இது நிகழ்ந்தது' என்று கடிந்து சொல்லி, அந்நாயைத் தமது மடியிலே எடுத்து வைத்து அதனுடல் முழுவதும் திருநீறு பூசி உருத்திராக்கம் அணிந்து அதற்கு ஐந்தெழுத்து உபதேசித்தனர். அவ்வளவிலே வானினின்று விமான

மொன்று இழிய நாய் தன் பூதவுடம்பு நீத்துத்தெய்வ வடிவு பெற்று அதிலேறிக் கைலை சென்றது. இஃ தறிந்த அவ்வூரார் மிகவும் வியப்புற்றார்கள்.

ஒரு நாள் ஆசாரியர் தமது தாயாரும் மனைவி யாருஞ் செய்த தீய செயல்களுக்கு வருந்தி இவற்றிற் குக் கழுவாய் யாதென்று சிந்தித்து ஓர் ஓலை முறியிலே,

'ஜ்ஞாநாஜ்ஞாநப்ரயுக்தாநாம்
பாபாநாம் மஹதாமபி।'
(அறிவுட னுகமற் றறிவின் றாகவிங்
குறுபிழை யொருவன்றா னுஞற்று மாயிடின்)

என்று முற்பாதிச் செய்யுளை யெழுதித் தமது வீட் டில் ஓரிடத்தில் வைத்துவிட்டுக் காவேரியில் நீராடச் சென்றனர். அப்பொழுது கருணைக் கடலாகிய அக் கினீசுவரப் பெருமான் ஆசாரியர் வடிவங்கொண்டு வீட்டுக்கு வந்து ஆசாரியரது மனைவியார் வாயிலாக அவ்வோலை முறியைப் பெற்று,

'ஏகாந்த நிஷ்க்ருதிச் சம்போஸ்
ஸக்ருதேவ ஹி கீர்தநாத்॥'
(செறிபவ நீங்கிடச் சிவன்ற னுமமே
மறைவிடத் திருந்தன்பின் வழுத்து கென்பவே)

என்று பிற்பாதிச் செய்யுளை யெழுதி ஆசாரியரது மனைவியாரிடம் கொடுத்துப் பண்டுபோல் அவ்விடத் தில் வைக்கச் சொல்லி அகன்றனர். ஆசாரியர் நீராடி

வந்து சிவபூசை முடித்துத் திருவமுது கொண்டு ஓலை முறியை எடுத்துப்பார்க்கும்பொழுது செய்யுள் முடிவு பெற்றிருப்பது கண்டு தம் மனைவியாரை அழைத்து 'ஏடீ, இவ்வோலையை நீ யாரிடம் கொடுத்தனை' என்றுவினவ, மனைவியார் 'நீராடச்சென்ற தாங்களே மீளவந்து அதனை வாங்கி எழுதித் தந்து போயினீர்கள்' என்றுகூற அக்கினீசுவரப் பெருமானே தாம் நினைத்தபடி இவ்வாறு எழுதிச் சென்றன ரென்று தெளிந்து சிவநாமத்தின் பெருமையையும் சிவபெருமானது செளலப்பியத் தன்மையையும் சிந்தித்து ஆனந்தக் கடலிலாழ்ந்தனர்.

ஒரு நாள் ஆசாரியர் வைசுவதேவ முடித்து விருந்தினரை எதிர்பார்த்தபொழுது ஒரு சிவனடியார் வந்தணைந்தார். ஆசாரியர் அவ்வடியாரை அன்புடன் வணங்கி எதிர்கொண் டழைத்து அறுசுவையோடு நால்வகை யுண்டியையும் அருத்தினர். அவ்வடியார் ஆசாரியர் செய்யும் உபாசாரங்கட்கு மிகவும் மனமகிழ்ந்து 'சுவாமீ, தாங்கள் செய்யும் உபசாரம் அரச வுபசாரமாயிருக்கின்றதே. தங்களுக்கு விளைநில முதலியன மிகுதியாக இருக்கின்றனவா?' என்று வினவினர். ஆசாரியர்,

'அஸ்த்யேவ ந: க்ஷேத்ரமக்ருஷ்டபச்ய
மநர்க பாகத் விகயோப பந்நம்।
உபதௌஷதீசாம்குர முந்நதீக
முக்ய த்லை கா ஈபாகமுபாதி சூந்யம்॥'

(ஏர்வளம் பெருததிங் கிறையி ருகதது
நீர்வளம் வாய்மடா நிறைந்த தண்புனற்
போர்வள முடையது போக மொன்றினாற்
சீர்வள மருதநெஞ் சிறந்த பூமியே)

என்றருளிச்செய்தனர். அதுகேட்ட அடியார் ஆசாரியரது சிவானுபவ நிலையை யுணர்ந்து வியப்பும் அன்புமுடையவராய் ஆசாரியர்பாற் பல நல்லுபதேசங்கள் கேட்டு வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

ஒரு கால் ஆசாரியர் பிரமயாகத்தின் பொருட்டுக் காவேரிக்குச் சென்றனர். அங்கே ஒரு புலைச்சி 'இக்காவேரி தன்னிடம நீராடினோர் தன்னைக் கண்டோர் இவர்கள் பாவங்களைப் போக்குங் கடவுட்டன்மையுடையவள். ஆதலின் நான் போய்த் தீர்த்தத்தைத் தலையிற்றெளித்து வருகிறேன்' என்று தன் கணவனிடஞ் சொல்லிப் போகத் தொடங்கினாள். அப்பொழுது கணவன் 'ஏடீ, இக்காவேரியிற் கிடக்கும் ஒவ்வோர் மணலும் ஒவ்வோர் சிவலிங்கமாயிற்றே. ஆதலின் நாம் அதனைப் பரிசித்தலாகாது' என்று சொல்லி அவளைத் தடுத்தான். இதனைக் கண்ட ஆசாரியர் 'எல்லாஞ் சிவமா யிருக்கும் நிலையை யறிந்த இவனே மேலான சிவஞானி' யெனக் கருதி அவனது திருவடிகளில் விழுந்து வணங்கி அவன் கழற்றிய பாதரக்ஷைகளைத் தமது முடிமீதுவைத்து ஆனந்தக் கூத்தாடி,

'ஜ்ஞாநாவலம்பிந: கேசித்
கேசித் கர்மாவலம்பிந: ।
வயம் து சிவபக்தாநாம்
பாத ரக்ஷாவலம்பிந: ॥

(ஞானந்தானே மேலாகு நன்மை யனைத்துந் தருமென்று
மீன மகன்ற கருமமே யெவற்றின் மேலாகுவதென்று
மான விரண்டுஞ் சிலர்பற்ற வடியே முக்கட் பரனடியார்
மேன்மைப் பதந்தாங் கடிநிலையே விரும்பி நாளுமேற்
[கொள்வாம்)

என்று பாடி எல்லாஞ் சிவரூபமாகக் கண்டு வாழ்ந்து வருவாராயினர்.

ஒரு சமயம் ஒரு நாய் ஆசாரியருக்குப் பாகம் அமைக்கும் அட்டிற் சாலையிற் புகுந்து அன்னத்தை யுண்டது. ஆசாரியர் 'நம்மை யுடையவராகிய சிவ பெருமானே இவ்வடிவில் வந்து உண்டார்' றென்று தெளிந்து, எஞ்சிய வுணவைச் சிவ நின்மாலியமாகக் கொண்டு சிவபெருமானை மறவாத சிந்தையுடையவ ராய்ச் சுற்றத்தாருடன் உண்டனர்.

பின்னொருநாள் ஆசாரியர் எண்ணெய் தேய்த்து நீராடி ஆடை முதலியன எடுத்துக்கொண்டு காவேரிக் குப் புறப்பட்டுப் போயினர். இடைவழியில் வயது முதிர்ந்து பழுத்த புலைஞனொருவன் தள்ளாடிய நடை யுடையவனாய்க் கோலூன்றித் தன் எளிய நிலையை எடுத்துச் சொல்லி 'எனக்குப் பசி அதிகமாயிருக்கின் றது. தண்ணீர்த்தகை வாட்டுகின்றது. சுவாமீ, சிறிது

அருள் செய்யவேண்டும்' என்று கூறினன். ஆசாரியர் உடனே தமது வீட்டிற்குத் திரும்பிவந்து அப்புலேஞன் விரும்பியவாறு எள்ளுப் பிண்ணாக்குங் கஞ்சியுங் கொடுத்தனர். கிழப்புலேஞன் அவற்றைப்பெற்று உண்டு மகிழ்ந்து சென்றனன். மறுநாள், விஷு அயன முதலிய புண்ணிய காலங்களிற் சிவபெருமானுக்கு மகாபிடேகஞ் செய்யும் நியமம் பூண்ட சோழவாசர், அன்றைப் புண்ணிய நாளிலும் அவ்வழக்கப்படி சிவபெருமானுக்கு மகாபிடேகஞ் செய்தனர்: அந்தணர்களுக்கும் உணவு அளித்தனர். சிவபெருமான் மகாபிடேகஞ்செய்த நாளிரவிலே அரசரது கனவிலெழுந்தருளித் தமது மகிழ்ச்சியைக் கூறியருளுவது வழக்கம். அன்றும் அரசர் நெடும்பொழுது சிவத்தியானத்திலிருந்து நித்திரைக்குப்போய் அதிக நேரமாகியும் சிவபெருமான் எழுந்தருளாமையால் மிகவும் மனம் வருந்தித் துயில்கொண்டார். அப்பொழுது சிவபெருமான் அரசரது கனவிலே ஓர் சிவனடியாராக எழுந்தருளி 'அரசனே, இன்று நீ செய்த உபசாரங்களனைத்தும் நேற்று நான் கிழப்புலேஞகைச் சென்றபோது என் விருப்பப்படி எள்ளுப்பிண்ணாக்கும் வடித்த கஞ்சியுங் கொடுத்து அரதத்தன் செய்த உபசாரத்திற்கு ஈடாகமாட்டா' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். அரசர் துணுக்குற்றெழுந்து சிவத்தியானபரராயிருந்து உதயகாலமானதும் நாட்கடன் முடித்து ஆசாரியரது வீட்டிற்கு வந்து அவர் திருவடிகளில் வணங்கிக் கனவின் வரலாற்றைக்கூறி மீட்டும் வணங்

கினர். இஃதறிந்த அவ்வூரார் அனைவரும் ஆசாரிய ரது சிவபத்தியை வியந்து கொண்டாடினர். ஆசாரி யர் சிவபெருமான் தம் அன்பரிடத்துக்கொண்ட எளி மையைப் பாராட்டிப் புகழ்ந்து மகிழ்சிறந்தனர்.

செங்கோன் முறை வழுவாது அரசு புரிந்து வருஞ் சோழவரசர் தீர்த்தயாத்திரை செய்யத் தொட ங்கிப் பல சிவதலங்களுக்குச்சென்று வருவாராயினர். அங்ஙனம் வருகின்றவர் கஞ்சனூரையடைந்து காவே ரியிலே நீராடி, அருள் சூல்கொண்ட கற்பகநாய கியாரையும் அக்கினீசுவரப் பெருமானையும் வழிபட் டுப் பிரதக்கிணம் செய்துவரும் பொழுது சிவயோக பரரா யெழுந்தருளியிருந்த அரதத்தா சாரியரை வணங்கிச் 'சுவாமீ, அடியேனைக் காத்தருளல் வேண் டும்' என்றார். ஆசாரியர் அரசரைநோக்கி 'அரசரே, உம்முடைய நாடு பண்டாரம் சுற்றத்தார் எல்லாம் க்ஷேமமா?' என்று வினவ, அரசர் 'சிவபெருமான் திருவருளினாலும் தேவரீர் கிருபாகடாக்ஷத்தினாலும் க்ஷேமமே' யென்று கூறிச் 'சுவாமீ, அடியேன் இவ்வுடம்போடு கயிலை செல்ல விரும்புகின்றேன். அதற்கோர் வழியினை யருள் புரியவேண்டும்' என்று பணிந்து தெரிவித்தார். ஆசாரியர் அரசரைநோக்கி 'நீர் இவ் வக்கினீசுவரம் திருக்கோடிகா திருவால வனம் திருவாவடுதுறை ஆபற்சகாயேசம் பிராணேசம் ஆமிரவன மென்னும் ஏழு தலங்களையும் அரையா மத்தினுள் வழிபட்டு வலம் வருவீராயின் உமது விருப்பம் நிறைவேறும்' என்றருளிச் செய்தனர்.

அரசர் அதற்கிசைந்து ஒரு ஏவலாளன் வெண்குடை நிழற்றக் குதிரைமீதேறி அரையாமத்திற்குள் எழுதலங்களையுந் தரிசித்து மீண்டு கஞ்சனூரை யடைந்து திருக்கோயிலுட் செல்லும்பொழுது குடைபிடித்தவனும் குதிரையும் ஓடிவந்த வேகக் களைப்பினால் கீழே விழுந்து மூர்ச்சிக்க, அவ்வளவிலே விமான மொன்று வர அதிலேறிக் குடைபிடித்தவனுங் குதிரையும் கயிலாயஞ் செல்வது கண்ட ஆசாரியர் அக் காட்சியை அரசருக்குக் காட்ட அரசர் தமக்கு விமானம் வாராமைக்கு மனம் நொந்து அதன் காரணத்தை ஆசாரியரிடம் வினவினர். ஆசாரியர் அரசரை நோக்கி 'நீர் வலம் வந்த முறையெவ்வாறு?' என வினவ, அரசர் 'அடியேன் குதிரைமீதேறிக் குடை நிழற்றச் சென்று வந்தேன்' என்றனர். ஆசாரியர் கால் நடையாய் வருந்தி அரையாமத்தினுள் எழுதலங்கட்குஞ் சென்று வந்தமையால் குடை பிடித்தவனுக்குங் குதிரைக்கும் விமானம் வந்தது. நீரும் அவ்வாறு வரின் அது கிடைக்கும்' என்றருளினர். அரசரும் அவ்வாறே எழுதலங்களையுங் கால் நடையிற்சென்று வழிபட்டு அரையாமத்தினுள் மீண்டு கஞ்சனூர் வந்து அக்கினீசுவரப் பெருமானை வணங்கி ஆசாரியரை எய்திச் 'சுவாமீ, தேவரீர் அருளியவாறு செய்து முடித்தேன்' என்று சொல்லிய அளவிலே ஆயிரகோடி ஞாயிறு ஒருங்குதித்தாற் போன்ற ஒளியுடைய விமான மொன்றிலே விநாயகர் சுப்பிரமணியர் திருநந்தி தேவர் முதலியோர் புடை

சூழப் பிரம விஷ்ணுக்கள் முதலியோர் போற்றிப்புகழ உமாதேவி சமேதராய்ச் சிவபெருமான் இடபாரூடராய்க் காட்சி கொடுத்து அரசரை விமானத்திலேற்றிக் கொண்டு செல்வாராயினர். அரசர் ஆசாரியரை வணங்கி 'சுவாமீ, அடியேன் கயிலாயஞ் சென்று வருகின்றேன்' என்று கூறி விடைபெற்றுச் சென்றார். இந்நிகழ்ச்சி கண்ட அனைவோருஞ் சிவக்ஷேத்திர தரிசன பலனும் ஆசாரியரது பெருமையுந் தெளிந்து மகிழ்ந்தனர்.

ஒரு நாள் அக்கினீசுவரப் பெருமான் ஓ ரந்தணராகி ஆசாரியர் வீட்டிற்கு வந்து 'ஓ! சாத்திரிகளே!' என்று உரத்த குரலில் அழைத்தனர். ஆசாரியர்,

'நவயம் கவயோ ந சாஸ்த்ரிணோவா
ந ச பௌராணிக நாடக ப்ரவீணா: ।
சிவ நாமநி வேததாவிசேஷே
பரமாநந்தபயோநிதௌ நிமக்நா: ।।

(கவிஞனு மல்லோ மற்றைக் கலைஞனு மல்லோ மிந்தப்
புவிபுகழ் புராணஞ் சொல்லும் புலவனு மல்லோங் கூத்து
நவில்பவன் றானு மல்லோ நறுங் கொன்றைச் சடைதாழின்
தவலரும் புணரி மூழ்குந் தன்மையிற் சிறந்துளோமே.) [பத்

என்று கூறி, வீதியில் வந்து பார்க்கும் அளவில் யாரையுங் காணாமையிற் சிவபெருமானே இவ்வாறு திருவிளையாடல் புரிந்தன ரென்று தெளிந்து மகிழ்ந்தனர்.

ஒரு சமயம் வேற்று நாட்டுப் பார்ப்பனனொரு வன் கஞ்சனூரிலே வந்து பொருட்பெண் டொருத்தி யில்லஞ் சென்று தான் அரதத்தாசாரியரது புதல் வனென்றுந் தன்னை மகிழ்விப்பின் மிகுந்த பொருள் தருதல் கூடுமென்றுஞ் சொல்லினன். அதனை வாய் மையாகக்கொண்ட அம்மாது அப்பார்ப்பனனைப் பல வகையால் மகிழ்வித்தனள். சிலகாலம் அவன் அவ ளோடு கலந்திருந்து பின்னர் அவளுக்கு யாதுங் கொடாது அவ்வூரினீங்கினன். அவள் ஆசாரியர் வீட்டுக்கு வந்து 'சுவாமீ, தங்கள் புதல்வர் என் னோடு நெடுநாளாக மகிழ்ந்திருந்து யாதுங் கொடாது போய்விட்டன' ரென்று கூறினள். அது கேட்ட ஆசாரியர் சிவபெருமானே அவ்வாறிருந்து போயின ரென்று ஆயிர நிஷ்கம் பெறும் பொற்கலனைக் கொடுத் தனர். அம்மாது தானும் மகிழ் சிறந்து அதனைப் பெற்றுச் சென்றனள். இதனை யறிந்த அவ்வூரார் அவளிடம் போய் 'நீ பெருந்தவறு செய்து விட்டாய். ஆசாரியரது புதல்வர் எண்மரும் சிறந்த ஒழுக்க முடையவரென்பதற்கு இஞ்ஞாலமே சான்றாகும். நீ அப் பொற்கலனை ஆசாரியரிடம் மீண்டு சேர்த்து விடு' என்று கழறினார்கள். அம்மாது அது கேட்டு மிகவும் அஞ்சி ஆசாரியரிடம் வந்து 'சுவாமீ, இதனைப் பெற் றுக் கொண்டு அடியேன் செய்த பிழையைப் பொறுத் தருளல் வேண்டும்' என்று குறையிரந்து முன் பெற் றுச் சென்ற பொற்கலனை ஆசாரியர்முன் வைத்து நின்றாள். அப்பொழுது ஆசாரியர் 'அம்மே, உன்

பால் அதனை நான் கொடுக்கும்பொழுது சிவார்ப்பண புத்தியாற் கொடுத்தேன். ஆகையாற் பரம சற்பாத்திரர்பாற் கொடுத்த அதனை மீளப் பெற்றுக்கொள்ள மாட்டேன்' என்று கூறி மறுத்தருளினர். இதனைக் கேட்டதும் அம்மாதரசிக்கு மனத்தூய்மை யுண்டாக அவள் அவ்வாயிர நிஷ்கத்தாலும் திருவிடைமருதூரிலே மகாலிங்கப்பெருமானுக்கு மண்டபம் விமான முதலிய பணிவிடை செய்தாள்.

ஓராண்டில் அக்கினீசுவரப் பெருமானுக்குத் தேரோட்டம் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அத்திருநாளைச் சேவிப்பதற்குக் கஞ்சனூரிலுள்ள பெண்டிரெல்லாம் தங்களைப் பலவகை அணிகலங்களாலே அழகு செய்துகொண்டு புறப்பட்டார்கள். ஆசாரியரது புதல்விகளாகிய கற்பகை மீனாக்ஷியென்னு மிருவரும் ஆசாரியரிடம் வந்து 'அப்பா, அயலகத்துப் பெண்கள் போல எங்கட்கும் அணிந்து கொள்ள ஆபரணங்கள் வேண்டும்' என்று பணிவுடன் வேண்டினர். ஆசாரியர் அவர்களை நோக்கி,

'ஸர்வாங்காநாம் பவேத் பூதி
பூஷணம் கலு சோபநம் ।
சிவாபதாந ச்ரவணம்
கர்ணயோர் மண்டநம்ஸதா ॥

கரபூஷா சிவார் சைவ
ப்ரதக்ஷிண விதிர் பவேத் ।
பாதயோர் பூஷணம் தஸ்மாத்
கிமர்தம் து:கிதே ஸ்ஸேதே ॥'

(கவின்றரும் வெண்ணீ றுடன்முழு தணிந்து
கலனென மிளிர்வது மன்றிச்
சிவன்றிருப் புகழ்கள் செவிமடுத் திடலே
செப்பருந் தோடெனப் பொலிய
வவன்றிரு வடிக்கீ ழருச்சனை புரித
லன்பொடும் வலம்வர லிவைதாந்
தவம்புரி கைகா லணியெனச் சிறப்பத்
தயங்கினீ ரழுங்குவ தெவனோ)

என்றருளிச் செய்தனர். அது கேட்ட புதல்வியர் 'அப்பா, எங்களுக்கு இவையெல்லாம் மேலான செல்வங்களாக அமைந்திருப்பினும் எங்கள் தோழி கள் தங்களைப்போல எங்களிடம் உலகத்தார் கொள்ளும் அணிகலங்க ளில்லையென்று இகழுகின்றார்கள்' என்றனர். ஆசாரியர் 'முற் பிறப்பிற் சிவபெருமானை வழிபட்டார்க்கே இப்பொழுது அணிகல முதலியன கிடைக்கும்' என்று கூறப் புதல்வியர் 'அப்பா, தேவரீருக்கு இவை கிடைத்தலரிதன்று எப்படியுந் தருதல் வேண்டும்' என்றார்கள். ஆசாரியர் சிறிது பொழுது சிவபெருமானது திருவடிகளை உள்ளக்கிழியின் உருவெழுதி வீற்றிருந்து பின்வெளிப்போந்து தெருவிலே செல்லும் ஓர் எருத்தை அவர்கட்குக் காட்டி 'இவ்வெருத்தின் குளம்பு அழுந்திய இடங்களில் உங்களுக்கு வேண்டிய அணிகலங்கள் கிடைக்கும். நீங்கள் அதன்பின் சென்று அவற்றைப் பெறுங்கள்' என்றருளினர். புதல்வியர் அவ்வாறே சென்று பலவிதமான ஆபரணங்களைக் கண்டெடுத்துவந்தார்கள். ஆசா

ரியர் புதல்வியரை நோக்கி 'நீங்கள் கண்டெடுத்தன எவ்வெவ்வணிகள்?' என்றுகேட்க, அவர்கள் 'சிலம்பு, பாதசாலம், பாடகம், மேகலை, அரைப்பட்டிகை, பதக்கம், பவளமாலை, தோளணி, கைவளை, ஆழி, தோடு, சுட்டி, திலகம், தலைக்கலன் முதலாயின வெல்லாங் கிடைத்தன' என்று கூறினார்கள். பிறகு தமது தாயாரிடம்போய் 'அம்மே, எமக்கு இவ்வணிகளைப்பூட்டி அலங்கரிக்கவேண்டும்' என்று வேண்ட, அம்மையாரும் அவ்வாறே அலங்கரித்து விடுக்க அவர்கள் தங்களுக்கு அணிந்தன போக எஞ்சிய அணிகலங்களை அக்கினீசுவரப்பெருமானுக்கும் கற்பகநாயகியம்மையாருக்கும் அலங்கரிக்கும் பொருட்டுப் பழம் முதலியன எடுத்துக்கொண்டு தம் தோழியாரோடு திருக்கோயில் சென்று வழிபட்டு மீண்டார்கள். இதனையறிந்த பலரும் ஆசாரியருடைய பெருமையை வியந்து மகிழ்ந்தார்கள்.

ஒரு நாளிரவிலே ஆசாரியர் திருவாவடுதுறையிலே சென்று மாசிலாமணிப் பெருமானை வழிபட்டு மீளும்பொழுது காற்றும் மழையுங் கலந்து அடிக்க இருள் மிகுவதாயிற்று. அடியார்க் கெளியராகிய மாசிலாமணிப் பெருமான் இடைக்கோலம் பூண்டு ஆசாரியரைப் பின்றொடர்ந்து வந்தார். ஆசாரியர் தம்முடன் வரும் ஆயரைக்கண்டு 'நீ யார்' என்று வினவ, அவ்வாயர் 'திருவாவடுதுறை எனது ஊர். நான் பசுக்களை மேய்ப்பவன். உமக்குத் துணையாக வந்தேன்' என்றார். ஆசாரியர் இவ்விருளிலே நமக்குத்

துணை கிடைத்ததே' யென்று மகிழ்ந்து 'நீ அவ்வாறு என்னுடன் வருவதாயின் வருக' என்று கூறித் தம் முடன் கூட்டிக்கொண்டு போய் வீட்டைச்சார்ந்ததும் ஆயரை நோக்கி 'நீ உணவு அருந்திச் செல்லலாமே' யென, ஆயர் 'உணவை என்னிடங் கொடுத்து விட்டால் நான் என் வீட்டுக்குக் கொண்டுபோய் உண்ணுகிறேன்' என்றார். ஆசாரியர் அதற்கிசைந்து அன்னமும் பாகற்காய்க் குழம்புங்கொடுப்ப, மாசிலாமணிப் பெருமானாகிய ஆயர் திருவாவடுதுறை யாலயம் அடைந்து அர்த்த மண்டபத்திலே அவற்றைச் சிதறி விட்டனர். மறுநாட் காலையில் திருமேனி தீண்டுவார் இவ்வாறு சிந்திக்கிடப்பது கண்டு மனம் வருந்தி அதிகாரிகளிடம் தெரிவித்தனர். அதிகாரிகள் கோயிற் பரிசாரகர்களை வரவழைத்து 'இவ்வநாசாரம் எங்ஙனம் நடந்தது? உண்மை கூறுதல் வேண்டும்' என்று ஒறுக்கத் தொடங்கினார்கள். அவர்கள் 'யாங்கள் இவ்வநாசாரம் செய்திலோம். நேற்றிரவு ஆலய முழுவதுஞ் சுற்றிப்பார்த்தே திருக்காப்பிட்டுச் சென்றோம். இது செய்தாரை யாங்கள் அறிந்திலோம்' என்று சொல்லி வருந்தி நின்றார்கள். அப்பொழுது ஓர் அசரீரிவாக்கு 'நேற்றிரவு அரதத்தாசாரியர் இங்கே தரிசனஞ்செய்து மீளும்போது மழையுங் காற்றும் அடித்ததால் மாசிலாமணிப் பெருமான் அவருக்குத்துணையாக ஆயவடிவிற் சென்றனர். வீடுசேர்ந்ததும் ஆசாரியர் திருவமுது கொள்ளச் சொல்லப் பெருமான் என்னிடம்கொடுக்க வேண்டும்; உணவைக்

கொடுத்து விட்டால் நான் என்வீடு சென்று உண்கிறேனென்று கூறி, ஆசாரியர் கொடுத்த அன்னத்தையும் பாகற்காய்க் குழம்பையும் பெற்றுவந்து இவ்வாறு சிதறித் திருவிளையாடல் புரிந்தனர்' என்று விண்ணில் எழுந்தது. அது கேட்டு அனைவரும் வியப்பெய்தி ஆசாரியரது பெருமையைப் புகழ்ந்தார்கள். ஆசாரியரும் பின்பு இந்நிகழ்ச்சியைத் தெரிந்து 'அடியனேன் பொருட்டு இரவில் மலரடிகள் நோவ வந்த கருணைத்திற மென்னே! என்று வாயாரப் புகழ்ந்து போற்றினர்.

பின்பு தமது முதுமை காரணமாக ஆசாரியர் வழக்கம் போல நாடோறும் * ஏழு தலங்கட்கும் போய்த் தரிசனஞ் செய்து வரமுடியாமையால், தமது ஆன்மார்த்த பூசையிலே அவ்வேழு தலத்து மூர்த்திகளையும் ஆவாகித்து வழிபட்டு வருவாராயினர்.

திரியம்பகரென்னும் அந்தணர் யதீசுவரரொருவரை யடைந்து தொண்டு பூண்டொழுகி வரும் நாளில் ஒரு நாள் அவர் யதீசுவரரை நோக்கிச் 'சுவாமி, நான் வேத முதலிய வித்தைகளையும் பயின்றேன். ஐந்தெழுத்துபதேசமும் பெற்றேன். இவற்றின் மேலாக அறியற்பாலதனை அருளிச் செய்ய வேண்டும்' என்று கேட்டனர். யதீசுவரர் 'ஐந்தெழுத்தினுஞ் சிறந்த தொன்றுமில்லையென்னும் உண்மையை யூறி

---

* ஏழுதலங்களாவன:—அக்கினீசுவரமாகிய கஞ்சனூர், திருக்கோடிகா, திருவாலவனம், திருவாவடுதுறை, ஆபற்சகாயேசம், பிராணேசம், ஆம்ரவனமென்பன.

யாத பேதையா யிருக்கின்றான் இவன்' என்று திரியம்பகர்மீது இரங்கி 'இன்னும் சில இரகசியம் உண்டு. நாளடைவிற் கூறுகிறேன்' என்றார். பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் திரியம்பகர் உணவின் பொருட்டு வெளியிற் போயிருந்த சமயம் யதீசுவாருக்கு இறுதிக்காலம் கிட்டியது. யதீசுவரர் திரியம்பகருக்கு உண்மை யறிவித்தலை விரும்பி நிலத்திலே 'ஐந்தெழுத்தினும் மேலாய் அறியற்பாலது பிறிதொன்றுமில்லை' யென்று எழுதி உயிர் நீத்தனர். இவ்வாறு யதீசுவரர் எழுதியதைப் பார்த்துக்கொண்டிருந்த கழைக்கூத்தியாகிய வேசி யொருத்தி அதனைத் தன் காதோலையி லெழுதிக்கொண்டு நிலத்திலெழுதப்பட்டதை யழித்துத் தன் வீட்டுக்குச் சென்றாள். திரியம்பகர் மீண்டுவந்து தமது குரு இறந்து கிடப்பதற்கு வருந்தி நிற்கும் அளவில் அங்குள்ளார் சிலர் 'உமது குரு நிலத்திலே யெழுதிய தொன்றை ஒரு வேசி எழுதிக்கொண்டு போய்விட்டாள்' என்றனர். திரியம்பகர் தமது குருவுக்குச் செய்ய வேண்டிய சரம கைங்கரியங்களைச் செய்து முடித்து அவ்வேசியின் வீட்டைத் தேடிச் சென்று அவளைப் பலவாறு புகழ்ந்து காதோலையைத் தருமாறு கேட்டனர். அவள் என்னோடிருந்துண்டு என்னை மகிழ்விப்பீராயின் நான் காதோலையைத் தருவேன்' என்றனள். திரியம்பகரும் அதற்கு உடம்பட்டு அவளைப் பலவிதத்திலும் மகிழ்வித்துக் காதோலையைப் பெற்றுத் தமது குருவின் உபதேசத்

தைப் படித்தறிந்து மகிழ்கூர்ந்தாராயினும் தாம் இது காறும் வேசியோடு உண்டு உறைந்த பிழைக்குக் கழுவாய் யாதாகுமோ என்று கவலைகொண்டு, தைப் பூசத்திலே திருவிடை மருதூருக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து பின் சுவாமி காவேரியில் தீர்த்தங் கொடுக்கும் பொழுது நீராடி வழிபட்டு மீண்டு வரும் வழியில் அரதத்தாசாரியர் வீட்டை யடைந்து 'சுவாமி, எனக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும்' என்று இரந்தனர். ஆசாரியர் அவரைத் தம்முடன் கூடப் பந்தியில் வைத்து அவர் விரும்பிய வாறு உண்பித்தார். உணவு முடிந்து திரியம்பகர் வெளிப்போந்ததும் சிலர் ஆசாரியரிடம் போய் 'இவன் வேசையோடு பழகியவன்' என்று கூறினார் கள். பின்பு திரியம்பகரை நோக்கி அச்சிலர் 'நீ எங்கிருந்து உண்டாய்?' என அவர் உள்ளதை உள்ளவாறு கூறினர். அது தெரிந்ததும் அவர்கள் ஆசாரியர்பாற் சென்று 'வேசையோடு உண்டு உறைந்த இம்மாபாவியைப் பந்தியில் வைத்துத் தேவரீர் உண் டது பழிப்புக்கு இடமாகுமன்றோ' என்று கேட் டார்கள். அப்பொழுது ஆசாரியர் 'வருந்திய மாத வத்தோர் வானோர் ஏனோர் வந்து ஈண்டிப் பொரு ந்திய தைப்பூசத்திலே காவிரியில் நீராடி மகாலிங் கப்பெருமானை வழிபட்டவர் இவர். ஆதலின் இவர் பாவங்களனைத்தும் ஒழிந்தன. சிவதரிசனத்தினாலே கோடி சன்மங்களிற் செய்த பாவங்களெல்லாம் அக லும்' என்றருளினர். இதன் உண்மையை அச்சிலர்

அறியாதவர்களாய் மேலும் மேலும் ஆசாரியரிடம் பல வினாக்கள் எழுப்பினார்கள். ஆசாரியர் திரியம்பகரை நோக்கி, 'நீர் இவர்களை அழைத்துக் கொண்டு திருவிடைமருதூர் சென்று மகாலிங்கப் பெருமானிடத்தில் 'சுவாமி, தைப்பூசத்தில் காவேரியில் நீராடி உம்மைத் தரிசித்தமையால் என்பாவம் ஒழிந்ததா? என்று கேளும்' என்று கூறிவிடுத்தனர். திரியம்பகர் அவ்வாறு அவர்களோடு திருவிடைமருதூரையடைந்தபொழுது ஆலயத்தில் சிவனடியார்கள் நிறைந்திருந்தனர். திரியம்பகர் ஆசாரியர் அருளியவாறு கேட்க மகாலிங்கப் பெருமான் 'குழந்தாய், நீ செய்தபாவம் ஒழிந்துவிட்டது' என்றருளினர். அச்சிலர் இதனைக்கேட்டும் உண்மை விளங்காதவராய் 'இஃது எதிரொலியேயன்றி மகாலிங்கப்பெருமான் றிருவாக்கன்று' என்றுகூறி மறுத்தனர். திரியம்பகர் சிவ வாக்கையும் மனிதவாக்கென்று கூறும் காலம் வந்ததேயென்று மனம் வருந்தி ஆசாரியரை அடைந்து நிகழ்ந்த செய்தியைக் கூறினர். ஆசாரியர் அவர்களோடு தாமும் திருவிடைமருதூர் சென்று திரியம்பகரை நோக்கி மற்றொருமுறை முன்போலப் பெருமானிடம் கேட்குமாறு கூறியருளினர். திரியம்பகரும் கேட்டனர் அப்பொழுது மகாலிங்கப்பெருமான் 'நம்மைத் தரிசித்ததாலும் காவேரியில் நீராடியதாலும் உன்பாவம் ஒழிந்தது ஒழிந்தது' என்று இடிமுழக்கம்போல *வானிழலாற் கூறியருளினார். அது

* வானிழல் - அசரீரி.

கேட்டு எல்லாரும் ஆசாரியரது பெருமையையும் பூசநீராட்டின் பயனுந் தெரிந்து மகிழ்சிறந்தனர்.

அரதத்தாசாரியரின் சகோதரி புதல்வர் ஒருவர் காசிக்குச் சென்று மணிகர்ணிகையில் நீராடவேண்டுமென விரும்பினர். ஆனால் அவர் மூடவர் ஒரு நாள் அவர் தமதுவிருப்பத்தை மாதுலராகிய ஆசாரியரிடம் தெரிவித்தனர். ஆசாரியர் கஞ்சனூரிலேயுள்ள பிரம தீர்த்தத்திலே அவரை மூழ்கச்சொல்லினர். அவ்வாறு மூழ்கிய மருகர் காசியிலே மணிகர்ணிகைக்கட்டத்தை யடைந்து கங்கையில் நீராடி விசுவநாதப் பெருமானை யும் விசாலாக்ஷியம்மையாரையும் வழிபட்டுக்கொண் டிருந்தனர். பல வருடங்கள் அம்மருகர் அங்கே தங்கி யிருந்தனர். ஒருநாள் அவர் விசுவநாதப் பெருமானை வழிபட்டுத் திரும்பும்போது ஆலயத்தினருகில் ஒரு வர் விடக் கோலம் பொலிந்து தோன்றத் தம் மனைவி யோடு சதுரங்கமாடிக்கொண் டிருக்கக்கண்டார். உடனே அவ்விடர் அவரை நோக்கி 'உம்முடைய ஊரிலே காசியபகோத்திரராகிய அரதத்தரென்னும் வைதிகர் இருக்கிறாரா?' என்று வினவினார். அதற்கு மருகர் 'ஐயா, ஆம். அவர் எனது மாதுலர். அச் சைவேந்திரர் க்ஷேமமா யிருக்கின்றார்' என்றார். அதனைக் கேட்ட அவ்விடர் தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டி 'நீர் அவரிடம் காசியில் உம்மை ஒரு வர் விசாரித்தாரென்று சொல்லும்' என்று சொல்லி னர். அவ்விடருடைய மனைவியும் புன்முறுவலோடு நானும் விசாரித்தேனென்று சொல்லும்' என்று

கூறினன். மருகர் அவ்விடரை நோக்கி 'யான் அங்கே போவது எப்படி?' யென்றார். விடர் 'நீர் எவ்வாறு இங்கு வந்தீர்?' என, அவர் தாம் தமது மாதுலர் சொற்படி பிரமதீர்த்தத்திலே முழுகி இங்கே யெழுந்த செய்தியைக் கூறினர். விடர் 'அப்படி யாயின் இப்பொழுது மணிகர்ணிகையிலே முழ்கும்' என்றனர். அவ்வாறே மருகர் மூழ்கிப் பிரமதீர்த்தக் கரையிலே யெழுந்து மாதுலரை அடைந்து வணங்கிச் 'சுவாமி, உமது திருவருளால் நான் காசியிலே சென்று கங்கையில் நீராடி விசுவேசரைத் தரிசிக்கப் பெற்றேன்' என்றார். ஆசாரியர் 'யாவரேனும் என்னை யறிந்தார் அங்கேயிருந்தாரா? என்று கேட்க மருகர் 'சதுரங்கமாடிக்கொண்டிருந்த விடதம்பதி கள் தங்கள் க்ஷேமத்தை விசாரித்தார்கள்' என்றனர். அது கேட்டதும் ஆசாரியர் என்னுடைய க்ஷேமத்தை விசாரிப்பவர் எம்பெருமானும் எம்பெரு மாட்டியாருமன்றி யாருமிலரென்று தெரிந்து 'அவர் கள் கேட்டார்களா? அவர்கள் கேட்டார்களா?' என்று சொல்லிக்கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்த்து ஆனந்தபரவசராய்க் கூத்தாடினர். அச்சம யம் ஓரசரீரிவாக்கு அனைவரும் கேட்குமாறு 'மணி கர்ணிகையில் மூழ்கினவர் பிரமதீர்த்தத்தில் எழுந்த மையால் இத்தீர்த்தமும் மணிகர்ணிகையென வழங் கப்படுவதாக. இதில் நீராடினோர் பாவமனைத்தும் ஒழிக' என்று எழுந்தது. ஆசாரியர் முதலிய அனை வரும் 'இது சிவபெருமானது திருவிளையாட'லெனத் தெளிந்து மகிழ்ந்தார்கள்.

மருகர் மாதுலராகிய ஆசாரியர்பால் பலவற்றை யுந் தெரிந்து எல்லாம் வல்லவராயினர். அவர் ஆசாரியர் அருளிச்செய்த 'சுருதிசூக்திமாலை' க்கு ஓர் சிறந்த வுரையியற்றி மிக்க புகழ் பெற்றார். அவரது பெருமையுணர்ந்தோர் அவரையும் அரதத்தரெனப் பெயரிட்டழைப்பாராயினர்.

ஒரு சமயம் திருடனொருவன் அரண்மனையிலே திருடினன். காவலர்கள் அவனைப் பின்தொடர அவன் ஆசாரியர் வீட்டினுள் விரைந்து புகுந்து 'சுவாமி, நான் அரண்மனையிலே திருடினேன். காவலர்கள் கடுகி வருகின்றனர். அவர்களிடமிருந்து என்னைக் காத்தருளவேண்டும்' என்று வேண்டினன். ஆசாரியர் அத்திருடனுக்குத் திருநீறுசாத்தி பூணூல் உருத்திராக்ஷமென்பன அணிந்து அவனைப் புதல்வனகப் பாவித்து வெண்கலவட்டிலிலே உணவுகொடுத்து உண்பிப்பாராயினர். பின்னாக அவனைத் தொடர்ந்து வந்த காவலர்கள் 'இங்கே வந்த கள்வன் எங்கே?' என்று கேட்க, ஆசாரியர் 'நமது புதல்வன் உள்ளே உணவு கொள்ளுகிறான். நீங்கள் வேண்டுமாயின் போய்ப்பாருங்கள்' என்றார். காவலர்கள் வீட்டினுட் போய் எங்கும் பார்த்தும் ஆசாரியரது புதல்வரை யன்றி யாரையுங் காணது போயினார்கள். இதனுண்மையை யறிந்தோர் சிவஞானியாகிய ஆசாரியரது பாவனை விசேடத்தைத் தெளிந்து பாவனைபோலி யென்று கூறும் மாயாவாதக் கொள்கை தவறென்பதைத் தேறினார்கள்.

கஞ்சனூரிலே சிவப்பிரியரென்னும் அந்தணரொருவருக்குச் சுமதி தருமபாலனென்ன இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் அழகிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கித் தமது தந்தையாருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தார்கள். அவ்விருவரும் தகுந்த பருவம் வந்த காலத்திலே ஒரு நாள் *விஷூசியாலும் பாம்புதீண்டுதலாலும் ஒருங்கு உயிர் துறந்தார்கள். இத்துன்பம் பொறுக்கலாற்றாத சிவப்பிரியர் அப்புதல்வர்களைக் கட்டித் தழுவி 'முற்பிறப்பில் பெரியோர்க்குத் தீமை செய்தேன் போலும் அதனால் எனக்கு இத்துன்பம் விளைந்தது கொல். முற்பிறப்பில் பிறர் பொருளை வெளவினேன் போலும் அதனால் எனக்கு இத்துன்பம் விளைந்தது கொல். முற்பிறப்பில் வாங்கின கடனை மீளக் கொடுத்திலேன் போலும் அதனால் எனக்கு இத்துன்பம் விளைந்தது கொல். முற்பிறப்பில் உழவர்க்குக் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடுத்திலேன் போலும் அதனால் எனக்கு இத்துன்பம் விளைந்தது கொல்' எனப் பலவாறு புலம்பி, ஓமஞ்செய்தற்குரிய காலங்கழிவதாகவும், அவர்களை ஈமத்திற்கு எடுத்துச் செல்ல மனமில்லாதவராய் அழுது கொண்டிருந்தனர். ஆசாரியர் அதனையறிந்து அவ்விடம் வந்து, சிவப்பிரியரது துக்கம் அப்புதல்வர்கள் எழுந்தாலல்லது நீங்காமைகண்டு திருநீற்றை மந்திரித்து அப்புதல்வர்கள் உடம்பில் இட்டருளினார். உடனே அவ்விருவரும் உயிர் பெற்

---

* விஷூசி - பேதி.

றெழுந்து வணங்கித் தூரத்தில் நின்று ஆசாரியரை நோக்கிச் ' சுவாமி, நாங்கள் முற்பிறப்பில் நந்தன் வீரனென்னும் பெயருடையோம் : சிவப்பிரியரது அடிமைகளாய் நாங்கள் தொழில் செய்து வந்தோம். அவர் எங்கட்குப் பல ஆண்டுகளாய்த் தக்க கூலி கொடுத்திலர் : அதனால் யாங்கள் அவர் புதல்வராகப் பிறந்தோம். இன்றோடு எங்கள் கடன் முற்றும் யாங்கள் கைவரப் பெற்றமையால் இறந்தொழிந்தோம்' என்று கூறினர். அவ்வளவில் சிவகணங்கள் விமானமொன்று கொண்டுவந்து ' அரதத்தரது மந்திர விபூதி உங்கள்மீது பட்டமையால் உங்கட்குச் சிவலோகங் கிட்டிற்று. இதில் ஏறுங்கள்' என்று கூறினார்கள். இருவரும் பூதவுடம்பு நீத்துத் தெய்வவுடம்பு பெற்று விமானமேறிச் சிவலோகமெய்தினர். இந்நிகழ்ச்சி கண்ட அனைவரும் வியப்பும் மகிழ்ச்சியுங்கொண்டு ஆசாரியரைப் பணிந்தார்கள்.

ஆசாரியர் சிவபெருமானது திருவடியையகலாது எங்குஞ் சிவபெருமானைக் கண்டு மாறாத சிவானுபவம் மருவியிருக்கும் நாளிலே ஒருநாள் சிவபெருமான் அவருக்கு முத்தி கொடுக்கத் திருவுளங்கொண்டு பிரம விஷ்ணுக்கள் சேவிக்க இடபவாகனத்திலேறி யெழுந்தருளிவந்து ஆசாரியருக்குக் காட்சிகொடுத்தருளினர். ஆசாரியர் கனவிலுந் தேவர்க்கரிய பெருமான் நனவில் தமக்குக் காட்சி கொடுத்தருளிய பேரருளை வியந்து அப்பெருமானைப் பலவாறு தோத்திரஞ் செய்து வணங்கினர். சிவபெருமான் 'அன்பனே, நீ நம்மைப்

பூசை தோத்திரம் செபம் தியான முதலியவற்றால் மகிழ்வித்தனை. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்' என்றருளினர். ஆசாரியர் 'சுவாமி, அடியேனுக்கு முத்தியளிப்பதோடு அடியேனுடைய வீட்டின் இரு பக்கங்களிலுமாகவுள்ள பதின்ன்கு வீட்டிலுள்ளவர்களுக்கும் முத்தியளித் தருளவேண்டும்' என்று வேண்டினர். கருணைக்கடலாகிய சிவபெருமான் 'அவ்வாருகுக' என் றருள்புரிந்தனர். அவ்வளவில் நவரத்தினத்தால் இழைக்கப் பட்டதாய் ஆயிரகோடி சூரியருதயம் போன்று விளங்கிய விமானமொன்று விண்ணினின்றும் இழிந்தது. அவ்விமானத்தில் ஆடவரும் பெண்டிரும் சிறுவர் சிறுமிகளுமாகிய பதின் மூன்று வீட்டாரும் ஏறினர்கள். சிவபெருமான் ஆசாரியரை நோக்கி 'இன்னும் ஒரு வீட்டிலுள்ளாரை யெங்கே' யென்று வினவ, ஆசாரியர் 'பதின்காவது வீட்டிலுள்ளவள் ஒருகிழவி: ஆயிரந் திங்கள் கண்டவள்: நாடோறும் விநாயகப்பெருமானுக்கு மோதகம் நிவேதிப்பவள்' என்று தெரிவித்து அவளை அழைத்து வருமாறு ஒருவரை விடுக்க, அக்கிழவி அழைக்க வந்தவரைநோக்கி 'நான் அடுப்பில் இப்பொழுதுதான் மோதகம் பாகஞ் செய்துகொண்டிருக்கிறேன். நியமம் தவறக் கூடாதன்றே. விநாயகப்பெருமானுக்கு நிவேதனஞ் செய்துவிட்டுப் பின்பு வருகிறேன். முற்படப் போகிறவர்கள் போகலாம்' என்று சொல்லினள். ஆசாரியர் இச்செய்தியைத் தெரிந்ததும் 'நாம் இப்பொழுது புறப்படுவோம். அக்

கிழவி விநாயகபூசை முடித்துக்கொண்டுவருகிறாளாம்' என்றுகூறச் சிவபெருமான் புன்முறுவல் செய்து விநாயகப்பெருமானை நோக்கி 'நீ அக்கிழவியின் பூசையையேற்று அவளைக்கைலாயத்திற்கு அழைத்து வருக' என்று அருள்புரிந்து ஆலயத்தின் புறம்பேயிருக்கச் செய்தனர். ஆசாரியர் விமானத்திலேறும் பொழுது அவருடைய வைசுவதேவான்னத்தையுண்டு வந்த நாய் தன்னை விட்டுவிட்டு ஆசாரியர் போவது கண்டு அழ, ஆசாரியர் அதனையும் ஏற்றித் தாமும் விமானத்திலேறினார். சிவபெருமான் அரதத்தாசாரியரை அழைத்துக்கொண்டு கைலைக்குச் சென்றுகொண்டிருக்கும் அளவிலே அக்கிழவி விநாயக பூசையை முடித்து அப்பெருமானது திருவருளினால் கைலைக்குச் செல்லும் ஆற்றல்பெற்று இடை வழியிலே ஆசாரியர் முதலியோரைச் சந்தித்து அவர்களுடன் வந்து சேர்ந்தாள். இவ்வாறு ஆசாரியர் முதலிய அனைவரும் தேவர்களாலும் முனிவர்களாலும் சித்தர் முதலியோர்களாலும் வழிபடத்தக்கதும் அழிவில்லாததும் பிரமதேவனும் இந்திரனும் தத்தம் ஊர்திகளை நடையாலும் மதநீராலுமன்றித் தெரிந்து கொள்ளலாகாத வண்ணம் வெண்ணிறம் விளங்குவதும் மெய்யுணர்ந்தோர் உள்ளம்போல ஆனந்த நிலயமானதுமாகிய ஸ்ரீ கைலாயத்தை அடைந்து பேரின்பப் பெருவாழ்வெய்தினார்கள்.